# குறிஞ்சி மக்களின் சூழலியல்

*முனைவர் ச. ஜெயா*
உதவி பேராசிரியர்
இந்தியன் கலை (மற்றும்) அறிவியல் கல்லூரி (இருபாலர்)
காரியந்தல் - கொண்டம், திருவண்ணாமலை
https://doi.org/10.5281/zenodo.14383124

**ஆய்வுச் சுருக்கம்**

*கணினி மயமாக்கப்பட்ட இன்றைய உலகில் மின்னனு தகவல் தொழில்நுட்பத்தில்* (A1 Artificial Intelligence and Machine learning) *செயற்கை நுண்ணறிவுத்'துறையில் புதிய உச்ச நிலையை அடைந்துவிட்டோம். இருப்பினும் சுற்றுப்புறச் சூழலைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கட்டாய சூழலிலும் வாழ்ந்து வருகின்றோம். இயற்கை வளங்களை அழித்துவிட்டு ஓடிஓடி உழைத்து பணம் சேமித்த பின் ஓய்வெடுக்க இயற்கை சூழலை நாடுகின்றோம். 20-ஆம் நூற்றாண்டில் இயற்கை சீர்குலைவிற்கும் சூழல் தூய்மை இழப்பிற்கும் நாம் காரணமாக இருந்தால் வளரும் தலைமுறைக்கும் வரும் தலைமுறைக்கும் இந்த புவியில் வாழ்வதற்கு இடம் இல்லாமல் போகும். காடுகளைக் காப்பாற்றுதல் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் வாயிலாகவும் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும். அத்தகைய நிலையில் தமிழ் இலக்கியங்களில் நிலவியல் பண்பாடு என்கிற கருத்தரங்கு பண்டையத் தமிழர்களின் ஆரோக்கியமான அறிவியல் வாழ்வினைப் பற்றிய செய்திகளை இன்றைய தலைமுறை மாணவர்கள் அறிந்து கொள்ளும் வாய்பினை நல்கியுள்ளது. அந்த வகையில் இயற்கையைப் போற்றியும், இயற்கையை வழிபட்டும், இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சங்கத் தமிழரின் குறிஞ்சி நில மக்களின் சூழலியல் மலைவளம், பண்பாட்டு வழிமுறைகள், பழக்க வழக்கங்கள், அறத்தோடு நிற்றல், உயிரியல் பரிணாம வளர்ச்சி விலங்குகளின் நடத்தையியல் பற்றிய அறிவியல் அடிப்படைக் கருத்துகளை விளக்குவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.*

## ஆய்வின் நோக்கம்

*உயிரினங்களின் வாழ்க்கைப் பரவல் செய்திகள் பற்றியும், உயிரினங்களுக்கும் அவற்றின் இயற்கைச் சூழலுக்கும் இடையிலான இடைவினைகள் பற்றியும் அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்யும் துறையாக சூழலியல்* (Ecology) *துறை அமைந்துள்ளது. இத்தகைய அறிவியல் ஆய்வு மற்றும் பண்பாட்டை பதிவு செய்யும் நோக்கமாகக் கொண்டு அகநானூற்று "களிற்று யானை நிரையில்" அமைந்துள்ள சில குறிஞ்சித்திணைப் பாடல்களை மட்டும் ஆய்வு எல்லையாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.*

## தொடக்கவுரை

*பண்டைத் தமிழ் கவிஞர்கள் இயற்கைக் காட்சி, பருவ காலங்கள், நிலப்பரப்பு ஆகியவை மனிதனுடைய வாழ்க்கையைப் பாதிக்கின்றன என்பதை உன்னிப்பாக நோக்கி பதிவு செய்துள்ளனர். குறிப்பாக குறிஞ்சி பாடிய கபிலர், பெருங்குன்றூர் கிழார், கலடனார் பாடல்கள் குறிஞ்சி மலைக்கே நம்மை அழைத்துச் சென்று மலைப்பயணம் மேற் கொண்ட உணர்வை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளன.*

*"சூழலியல் என்பது உயிரிகளுக்கும் அவற்றை சூழ்ந்துள்ள நிலைகளுக்கும் இடையிலுள்ள உறவையும், தாவரவிலங்குகள்நுண்ணுரிகள் ஆகியவற்றில் இயக்கங்களையும் உயிரினத்*

தொகைகளிடையே (Population) நடைபெறும் இடைவினைச் செயல்களையும் சூழ்நிலைக் காரணிகளின் இயல்புகளையும் அவற்றின் செயல்களையும் இவை அனைத்தும் இணைந்து நிற்பது சூழ்நிலைக்கல்வி அது பற்றி விளக்குவது சூழலியல்"[1] (அறிவியல் களஞ்சியம் தொகுதி இரண்டு ப.320).

இத்தகு சூழலியல் அமைப்புகள் குறஞ்சி நிலத்தில் வெளிப்படும் பாங்கினை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

**காலம் கணித்தல் வரைவு கடாதல்**

வானியல் நுண்ணறிவு மிக்கவராக சங்கத்தமிழர்கள் இருந்துள்ளனர். திருமண ஏற்பாடுகள் செய்ய காலத்தை அழகாக கணித்துள்ளனர். தலைவியை மணந்து கொள்ள வருமாறு தோழி தலைவனுக்கு அறிவுறுத்துகின்றாள். வளமான இலைகளையுடைய வாழைக்காய்கள் தாமாகவே முதிர்ந்து கனிந்து கிடக்கின்றன. பாறையில் சுனைநீர் கொட்டுகின்றது. இனிப்பு மிகுதியால் அதிகம் உண்ணாதபடி திகட்டுகின்ற பலாச்சுளைகள், நன்கு விளைந்த நறுந்தேன் ஆகியவற்றை சுவைத்த ஆண்குரங்கு. இங்கு ஆண்குரங்கின் செயல் தலைவனுடன் ஒப்பிடப்படுகிறது. தலைவியிடம் இனிமையாக பழகிவிட்டு மணமுடிக்காமல் காலம் தாழ்த்துகிறான். ஆகையினால் மிளகுகொடி படர்ந்த சந்தன மரத்தில் கூட ஏறமுடியாமல் நறுமணம் வீசக்கூடிய புக்கள் நிறைந்த படுக்கையிலே உறங்கி கிடக்கும் குரங்கின் மலை நாட்டிற்குத் தலைவனே

**"வேங்கையும் ஒள்ளினர் விரிந்தன**
**நெடுவெண்திங்களும் ஊர்கொண்டன்றே"**

*(அகம்2 :16-17)*

இவ்வாறு "புதர்கள் சூழ்ந்த" வேங்கை மரங்களும் புக்கத் தொடங்கிவிட்டன. எந்த தாவரமும் தனித்து வளர்வது இல்லை. இங்கு தாவரவியலின் கூட்டுச் சூழலியலை அறிந்து கொள்ளலாம். இத்தாவரக் கூட்டம் தாவரச் சமுதாயம் (Plant Commumity) என்பர். திங்களும் நிரம்பப்பெற்றது. (அமாவாசை) வந்துவிட்டது. இனி வளர்பிறை நாளே திருமணசெய்ய ஏதுவாக இருக்கும் என்பதைச் சுட்டிகாட்டுகின்றாள். ஆதலால் தான் தொல்காப்பியர்

**"முதல் எனப்படுவது நிலம்பொழுது இரண்டின்**
**இயல்பென மொழிய இயல்புணர்ந் தோரே"**

***(தொல்.பொருள்.4)***

நிலத்தையும் பொழுதையும் முதற்பொருளாக வைத்துள்ளார்.

**விலங்கின நடத்தையியல் (Ethology)**

சார்லஸ் டார்வினுக்கு முந்தைய சங்கத் தமிழன்தலைவன்தலைவியைசந்திப்பதற்காக வீட்டிற்கு வெளியேயிருக்கிறான் என்பதை அறிந்து கொண்ட தலைவி குறிஞ்சி நிலத்தில் ஏற்படும் இடர்பாடுகளையெல்லாம் கடந்து இங்கு வருகிறான். விரைவில் மணமுடிக்க வருமாறு தலைவன் செவிகளில் கேட்குமாறு தோழியிடம் கூறுகிறாள். சங்கப்பெண்கள் அகஉணர்வு மாண்பு (ஒழுக்கம்) அறத்தோடு நிற்றல் ஆகும்.

விலங்குளின் செயல்பாடுகளைப் பெருங்குன்றூர் கிழார் மிக அழகாகப் பதிவு செய்துள்ளார்.

***ஈயற்புற்றத்து ஈர்ம்புறத்து இறுத்த***
***குரும்பி வல்சிப் பெருங்கை ஏற்றைத்***
***தூங்குதோல் துதிய வள்உகிர் கதுவலின்***
***பாம்பு மதன் அழியும் பானாட் கங்குலும்***

***(அகம் 8: 1-4)***

பிளந்த வாயினையுடைய ஆண்புலியானது பெரிய பன்றியினைக் கொன்று பலாமரங்கள் நிறைந்த மலைப்பகுதியில் புலால் நாற்றம் வீசும்படியாக இழுத்துச்செல்கிறது. புலி இழுத்துச் செல்வதால் மூங்கில்கள் தம்முள் உரசி சத்தமிடுகின்றன. அந்த மலையிலே இன்னொரு பக்கத்தில் சுரபுன்னையோடு வாழை மரங்களும் இருந்தன. அதை உண்ண வந்து களிற்று யானை நீருள்ள குழிக்குள் விழுந்துவிட்டது. குழிக்குள் விழுந்த ஆண்யானையைக் காப்பாற்ற பெண்யானை பெரிய பெரிய மரங்களை முறித்து அக்குழியினுள்ளே போடுகின்றது. அப்படி மரங்கள் முறிகின்ற சத்தமானது எல்லா குகைகளிலும் எதிரொலிக்கிறது. எண்ண முடியாத மான் கூட்டங்கள் நடந்து சென்ற காலடித்தடத்தில் மின்னல் வழிகாட்ட நாங்கள் நடந்து வந்தோம்

**"மின்னுவிடச் சிறிய ஒதுங்கி"**

**(அகம் 8.14)**

அதுமட்டுமின்றி ஈயல் (ஈசல்கள்) மொய்க்கின்ற பாம்பு புற்றுகளின் மேலே உள்ள புற்றாங் சோற்றினை பெரிய கரடியானது எடுத்து உண்கிறது. கரடியின் கூரிய நகங்கள் பட்டு பாம்புகள் துன்புறுகின்றன. அத்தகைய மலை நாட்டின் தலைவனே! என்று இடித்துரைக்கின்றாள். மேற்கண்ட செய்தியின் வாயிலாக விலங்குகளின் செயல்பாடுகளையும் கவிஞர் பதிவு செய்துள்ளார். இதனை தான் அறிவியல் துறை விலங்கியல் (Zoology) என்று பெயர் வைத்துள்ளது. இத்தகு விலங்கியல் துறையின் ஒரு உட்பிரிவே "விலங்கின நடத்தையியல்" (Ethology) எத்தாலஜி என்பர். ஆய்வகம் இல்லாது இயற்கைச் சூழலில் விலங்குகளின் நடத்தையைப் பற்றி அறிய உதவும் விலங்கின நடத்தையியல் எத்தாலஜி எனப்படும். நடத்தையியல் வல்லுநர்கள் இயற்கைத் தேர்வுக் கோட்பாட்டின் அடிப்படையில் உயிரினங்களின் நடத்தைகளை பரிணாம வளர்ச்சியின் மூலம் உணர சிரமமாக இருந்து வந்த நிலையில் சார்லஸ் டார்வின் எழுதிய "மனிதன் மற்றும் விலங்குகளின் உணர்ச்சிகள்" (The Expression of the Emotions in Man and Animals) என்ற நூல் உதவியது என்கின்றனர்.[3]

இரு விலங்குகளுக்கு இடையேயுள்ள அன்பு உணர்வுகளையும் சங்கக் கவிஞர்கள் உற்று நோக்கியுள்ளனர். ஆறறிவு உடைய மனிதர்களுக்கு மட்டுமின்றி அன்பு அஃறிணை உயிர்களிடமும் உண்டு. இப்புவியில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது "அன்பு" என்பதை "எருமை வெளியனார் மகனார் கடலனார்" குறிஞ்சித் திணையில் பதிவு செய்துள்ளார்.

**"ஈர்உயிர்ப் பிணவின் வயவுப்பசி களைஇய**
**இருங்களிறு அட்ட பெருஞ்சின உழுவை**
**நாம நல்லராக் கதிர்பட உமிர்ந்த**
**மேய்மணி விளக்கின் புலர ஈர்க்கும்"**

**(அகம் 72:12-15)**

என்பதாவது கருவுற்றிருக்கும் பெண் புலியின் பசியைப்போக்குவதற்கு ஆண்பன்றியைக் கொன்றது ஆண்புலி இரவு நேரம் என்பதால் நல்லபாம்பு தன் மணியை உமிழ்ந்து ஒளியைக் கொடுத்தாய் அந்த நாகமணியின் வெளிச்சத்தில் ஆண்பன்றிக்கறி இறைச்சியை இழுத்துச் செல்லும் அத்தகைய நிலப்பகுதி பெருங்கற்கள் நிறைந்த குறுகிய பாதையுடையது. இத்தகு கொடுமையான பாதைகளை கடந்து இரவுக்குறி வரவேண்டாம் என்பதைக்கூற விலங்குகளின் உணர்வுகளையும் அழகாக பதிவு செய்துள்ளார்.

சார்லஸ் டார்வினுக்கு முன்னோடியாக நம் பண்டைத் தமிழர்கள் அறிவியல் துறையில் வல்லுநர்களாக இருந்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

சுற்றுப்புறச்சூழல் என்பது தாவரங்கள் விலங்குகள் அடங்கிய அனைத்து உயிரினங்களுடன் தொடர்பு கொண்டிருக்கும் அனைத்து இயற்பியல் கூறுகளையும் உள்ளடக்கியதாகும். பண்பாட்டு சூழலியல் என்ற பார்வையில் நாம் பார்த்தோமேயானால் மானிடவியல் துறையில் ஒரு பரிவாக உள்ளது. மனிதனுக்கும் சூழலுக்கும் இடையிலான காலம் மற்றும் இடம் சார்ந்த தொடர்புகள் பற்றி ஆராயும் ஒரு மானிடவியல் துறையாகும் குறிஞ்சி மக்களின் பண்பாட்டை விளக்கும் பாடல்

**"தேங்கமழ் இணர வேங்கைச் சூடித்**
**தொண்டகப் பறைச்சீர்ப் பெண்டிரொடு விரைஇ**
**மறுகில் தூங்கும் சிறுகுடிப் பாக்கத்து**
**இயல்முருகு ஒப்பினை, வயநாய் பிறபடப்"**

**(அகம் 118:2-5)**

அருவிகள் விழும் மலைப்பகுதியில் சிறுகுடிப்பாக்கம் என்பது ஊர் பெயராக அமைந்தள்ளது. அங்குள்ள வேங்கைப்புக்களை தலையில் சூடியும் தொண்டகம் எனும் பறையினை இசைத்தும் பெண்டிரோடு கலந்து ஆடியும் மகிழ்ந்துள்ளனர். வேட்டை நாய் வளர்ப்பு பிராணியாக வைத்துள்ளனர் தேன், பலா மிகுதியாக கிடைத்த நிலப்பரப்பைக் கொண்டுள்ளதாகவும் குறிஞ்சி நிலம் அமைந்துள்ளது. குறத்தி குறி சொல்லும் பழக்கமாகிய பண்பாட்டுக் கூறுகளையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**வேலன் வெறியாட்டு**

*குறிஞ்சி நில மக்களுக்கே உரித்தான நம்பிக்கைகளின் ஒன்று வேலன் வெறியாட்டு நிகழ்வு ஆகும்.*

***"கையறு நெங்சினள் வினவலின் முதுவாய்ப்***
***பொய்வல் பெண்டிர் பிரப்புஉளர்பு இரீஇ***
***முருகன் ஆர் அணங்கு என்றலின்"***

***(அகம் 98:8-10)***

*இந்நிகழ்வு காதல் வயப்பட்ட தலைவியின் உடலிலும் மனதிலும் தோற்றத்திலும் நடத்தையிலும் காணப்பட்ட மாற்றங்களைக் கண்டு தாயால் நிகழ்த்தப்படுகிறது.*

**கார் பருவமழை குறிஞ்சி மலை**

*கார்கால இரவு நேரத்தில் காட்டுப்பகுதி எவ்வாறு காட்சியளிக்கும் என்பதை இலக்கிய நயத்தடன் அறிந்து கொள்ள முடிகின்றது.*

***"இருள்கிழிப் பதுபோல் மின்னி வானம்***
***துளிதலைக் கொண்ட நனிபெயல் நடுநாள்"***

***(அகம் 72 :1-2)***

*இரவு நேரத்திலும் விடாது மழை பெய்து கொண்டியிருக்கின்றது. இருளை கிழிப்பது போல் மின்னல் வெட்டுகின்றது. மின்மினி புச்சிகள் பாம்பு புற்றினைச்சுற்றி விளக்குகள் போல காணப்படுகின்றது. முதலைகள் இருக்கின்ற காட்டாறில் வெள்ளம் ஏற்பட்டு பெருங்கற்களில் மோதி ஒலியை யெழுப்புகின்றது. தெய்வங்கள் இருக்கின்ற மலைப்பக்கத்தில் இரவு நேரத்தில் தலைவன் வருதல் சரியன்று என்ற கருத்தினை உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளது. நம்பிக்கை பற்றிய செய்திகளையும் காணமுடிகின்றது.*

**இயற்கை சூழலியல் காதல் இன்பம்**

*இயற்கையின் அமைதி எவ்வாறு காதலுக்கு இன்பம் பயக்கும் என்பதை கபிலர் கூறுகிறார். (அகம் 82 பாடல்)*

*காற்று வீசுவதனால் துழையுள்ள மூங்கில்கள் அசைகின்றது அது குழலின் இசையையும் இனிமையான அருவியின் ஓசை முழவின் இசையையும் கலை மான்கள் கூட்டம் சத்தமிட பெருவங்கியத்தின் ஒலியைப் போலவும் புந்தோட்டத்தில் வண்டுகள் ரீங்காரம் செய்வது இனிய யாழினிசையாகவும் மலையடுக்குகளில் ஆடுகின்ற மயிலினங்கள் களத்தில் ஆடும் விறலியரைப் போலத் தோன்றி மனதிற்கு இன்பத்தை அளிக்கின்றன. அத்துணை இன்பம் தரும் மலைநாட்டிற்குத் தவைன் எனக்கு மட்டும் துன்பம் செய்தனன் என தலைவி தோழிக்கு அறத்தோடு நிற்கிறாள். ஆகையினால் தான் கபிலர் "குறிஞ்சிக்கு ஓர் கபிலர்" எனப் போற்றப்படுகின்றார்.*

*"மானிட முயற்சி இடம்பெறும் எல்லாத் தோற்றப்பாடுகளும் நாம் வாழும் புமியின் மேற்பரப்பின் மீது நிகழும் தோற்றப்பாடுகளில் ஒரு தனிப்பிரிவாக அமைகின்றன. இப்பிரிவைச் சார்ந்த பொருள் பற்றிய ஆராய்வுக்குத்தான் மக்கட் புவியியல் என்று பெயர் என்ற அறிஞர் சோர்" அவர்களின் கூற்று இங்கு ஒப்புநோக்கத்தக்கது.*

***மானிடப்புவியியல் , க.குணராசா, ப.***[1]

**முடிவுரை**

*குறிஞ்சி நில மக்களின் இயற்கைச் சூழலியல், பண்பாடு, ஒழுக்கம், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் பற்றி அறிந்து கொண்டது மட்டுமின்றி விலங்கியலின் நடத்தையியல்* (Ethology) *பற்றிய அறிவியல் செய்திகளையும் இக்கட்டுரையின் வாயிலாக அறிந்து கொண்டோம்.*

**துணை நூல் பட்டியல்**


1. *புலியுர்கேசிகன் (தெளிவுரை), அகநானூறு, பாரிநிலையம், சென்னை. 1960*


**துணைநூல்**


1. *கண்ணபிரான் .சி. அறிவியல் களஞ்சியம், மதன் பதிப்பாசிரியர், தொகுதி இரண்டு, தமிழ் பல்கலைகழகம், தஞ்சாவுர். 1985*
2. *தமிழண்ணல். தொல்காப்பியம். (மூலமும் கருத்துரையும்) மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.2008.*
3. https://ta.wikipedia.org.
4. *குலாநிதி குணலாசா.க. மானிடப்புவியியல். கமலம் பதிப்பகம், யாழ்பாணம். 1997*